


03. 02. 2026

தலைப்புச் செய்திகள்

- இந்தியா - அமெரிக்கா இடையிலான வரலாற்று சிறப்புமிக்க வர்த்தக ஒப்பந்தத்திற்கு தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற குழு பிரதமர் திரு. நரேந்திரமோடிக்கு பாராட்டு தெரிவித்துள்ளது.
- இந்திய அமெரிக்க ஒப்பந்தம் சார்ந்த முழு விவரங்கள் விரைவில் வெளியிடப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. ஜே. பி. நட்டா கூறியுள்ளார்...
- முன்னாள் முதலமைச்சர் சி. என். அண்ணாதுரையின் 57ஆவது நினைவு தினத்தை ஒட்டி திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னையில் அமைதி பேரணி இன்று நடைபெற்றது.
- நாட்டின் வளர்ச்சி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு மத்திய நிதிநிலை அறிக்கை வழிகோலும் என்று பிஜேபி தேசிய பொதுக்குழு உறுப்பினர் திரு. அண்ணாமலை குறிப்பிட்டுள்ளார்.

- தமிழ்நாட்டில் இலவச திட்டங்களுக்கான செலவுகள் எதிர்காலத்திற்கான முதலீடுகள் என்று மாநில அமைச்சர் திரு.முத்துசாமி கூறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

*************

NDA - பிரதமர் பாராட்டு

இந்தியா அமெரிக்கா இடையிலான வரலாற்று சிறப்புமிக்க வர்த்தக ஒப்பந்தத்தின் வெற்றிக்கு தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற குழு கூட்டத்தில் பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு.கிரண் ரஜிஜூ, பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான ஆட்சியில் இதுவரை 39 நாடுகள் இந்தியாவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பதாக அவர் எடுத்துரைத்தார்.

கட்சியின் தேசிய தலைவர் திரு.நிதின் நபீனுக்கும் வரவேற்பு அளிக்கப்பட்டதாக திரு.கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

இந்த கூட்டத்தில் பங்கேற்ற மத்திய அமைச்சர்கள் திரு.அமித்ஷா, திரு.ராஜ்நாத்சிங், திரு.நிதின்கட்காரி, திரு.ஜே.பி.நட்டா, உள்ளிட்டோர் பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

*************

பிரதமர் – ட்ரம்ப் நன்றி

முன்னதாக இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கான வரியை அமெரிக்கா 18 சதவிகிதமாக குறைத்துள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி சமூகவலைதளத்தில் அறிவித்தார்.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்புடன் தொலைபேசியில் கலந்துரையாடியபின்னர் இது எட்டப்பட்டதாக கூறிய பிரதமர் இருபெரும் பொருளாதார நாடுகள் இணைந்து செயல்படுவதால் மக்கள் பெரிதும் பயன்பெறுவதோடு பரஸ்பர ஒத்துழைப்பும் வாய்ப்புகளும் பெருகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஒப்பந்த்திற்காக நாட்டு மக்களின் சார்பில் அதிபர் ட்ரம்பிற்கு பிரதமர் நன்றிகளை உரித்தாக்கியுள்ளார்.

*************

மத்திய அமைச்சர்கள் – வர்த்தக ஒப்பந்தம்

இந்தியா - அமெரிக்கா இடையிலான வரலாற்று சிறப்புமிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நிறைவேறியதற்காக பிரதமர் திரு.நரேந்திரமோடி மற்றும்

அமெரிக்க அதிபர் டோனல்டு ட்ரம்பிற்கு மத்திய அமைச்சர் திரு.பியூஷ்கோயல் நன்றி தெரிவித்துள்ளார்.

ஒத்த கருத்துடைய இரண்டு ஆற்றல்மிகு நாடுகளின் வணிகம் தொடர்பான செயல்பாடுகளை இது பிரதிபலிப்பதாக அவர் எடுத்துரைத்தார்.

வளர்ச்சி மற்றும் அமைதிக்கு பெரிய அளவில் இது வழிகோலும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இருநாட்டு மக்கள் மட்டுமல்லாமல் சர்வதேச நாடுகளும் இதனால் பயன்பெறும் என்றார்.

இந்த ஒப்பந்தத்தால் இந்தியாவில் தயாரிப்போம் இயக்கத்திற்கு உத்வேகம் ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ள மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் இளையோர் சிறு குறு தொழில் நிறுவனங்கள் விவசாயிகள் பெரிதும் பயன்பெறுவார்கள் என்று கூறினார்.

நம் தேசத்தின் வளர்ச்சியில் உலக நாடுகள் கொண்டுள்ள நம்பகதன்மையையும், பிரதமர் திரு.நரேந்திரமோடியின் வெற்றிகரமான தலைமைத்துவத்தையும் இந்த ஒப்பந்தம் பிரதிபலிப்பதாக தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர்கள் திருமதி அன்பூர்ணா தேவி, திரு.சஞ்சய் சேத் ஆகியோர் இரு பெரிய ஜனநாயக நாடுகளின் வளம் சார்ந்த புதிய அத்யாயம் இந்த ஒப்பந்தத்தால் தொடங்கியுள்ளதாகவும், புதிய

வாய்ப்புகளுக்கு இது திறவுகோலாக அமையும் என்றும் கூறியுள்ளனர்..

*************

நட்டா - ஒத்திவைப்பு

இந்திய அமெரிக்கா இடையிலான ஒப்பந்தம், வரி சார்ந்த தகவல்கள் உள்ளிட்ட முழு விவரங்களையும் மத்திய அரசு விரைவில் வெளியிடும் என்று மாநிலங்களவை முன்னவரும், மத்திய அமைச்சருமான திரு.ஜே.பி.நட்டா கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் இன்று இதனை தெரிவித்த அமைச்சர், இதுகுறித்து சம்மந்தப்பட்ட அமைச்சர் அனைத்து தகவல்களையும் விரைவில் அறிக்கை ஒன்றில் தெரிவிப்பார் என்றார்.

இந்த விவரங்களை வெளியிட வேண்டும் என்று கோரி எதிர்கட்சியினர் அவையில் முழக்கமிட்டதை தொடர்ந்து இதனை தெரிவித்துள்ள திரு.ஜே.பி.நட்டா, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகள் இதுகுறித்து விவாதம் கோரி பிரச்சனை எழுப்புவது ஜனநாயகத்திற்கு விரோதமானது என்று குறிப்பிட்டார்.

இதனிடையே இந்த ஒப்பந்தம் குறித்த விவாதத்தை வலியுறுத்தி எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.

*************

நித்தியானந்தராய்

நாடு முழுவதும் 28 மத்திய ஆயுத காவல்படை பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருவதாக உள்துறை இணை அமைச்சர் திரு.நித்தியானந்த ராய் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், அதி நவீன தொழில்நுட்ப பயிற்சிகள் ஆயுத படையினருக்கு வழங்கப்படுவதாக குறிப்பிட்டார்.

தற்போதைய சவால்கள், எதிர்கால தேவைகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு விரிவான பயிற்சிகளை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

இத்தகைய சிறப்பு பயிற்சிகள் மூலம் நக்சல் தீவிரவாதமும், பயங்கரவாதமும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து அகற்றப்பட்டுள்ளதாகவும் அடுத்தமாத இறுதிக்குள் தீவிரவாதம் வேரோடு களையப்படும் என்றும் குறிப்பிட்டார்.

நவீன தொழில்நுட்ப பயிற்சிகளால் தீவிரவாத தடுப்பு செயல்பாடுகள் வலுப்பெற்று, உள்நாட்டு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

*************

உச்சநீதிமன்றம்

தரவுகளை பகிர்தல் என்ற பெயரில் நாட்டு மக்களின் தனிநபர் உரிமை மீறலில் மெட்டா, வாட்ஸ்அப் உள்ளிட்ட

சமூக ஊடகங்கள் செயலாற்றுவதை அனுமதிக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தனிநபர் கொள்கை மீறலுக்காக 213 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதை எதிர்த்து இந்த ஊடகங்கள் தாக்கல் செய்துள்ள மனுவை விசாரித்த தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு, வரும் 9ஆம் தேதி இதற்கான இடைக்கால ஆணை பிறப்பிக்கப்படும் என்றும் கூறியுள்ளது.

இம்மனுக்களின் கீழ் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் இணையவும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

அரசின் சார்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் திரு. துஷர் மேத்தா வர்த்தக பயன்பாட்டிற்காக தரவுகள் பகிரப்படுவதாக குற்றம் சாட்டினார்.

இதற்கு பதில் அளித்த தலைமை நீதிபதி சூரிய காந்த் இது சார்ந்த அரசியல் சாசன உத்தரவை பின்பற்ற முடியா விட்டால் இதற்கு சம்மந்தப்பட்டவர்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்றும் நாட்டுமக்களின் தனிநபர் சுதந்திரத்தில் எவ்வித சமரசத்திற்கு இடமில்லை என்றும் குறிப்பிட்டார்.

சமூக ஊடகங்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், சமூக ஊடகங்களின் அனைத்து தகவல்களும் மிகவும் பாதுகாப்பனவை என்றும் சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் கூட, அதன் உள்ளடக்கத்தை பார்க்க முடியாது என்றும் விளக்கம் அளித்தனர்.

*************

அண்ணாதுரை

தமிழக முன்னாள் முதலமைச்சர் சி.என்.அண்ணாதுரையின் 57ஆவது நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளை ஒட்டி திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை அண்ணா சிலையிலிருந்து – அண்ணா சதுக்கம் வரை அமைதி பேரணி இன்று நடைபெற்றது.

திருச்சியில் மாநில அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழியும்,

நாமக்கல்லில் திரு.மதிவேந்தனும் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

அண்ணாவின் சொந்த ஊரான காஞ்சிபுரத்தில் உள்ள அன்னாரது நினைவு இல்லத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று, மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினார்.

சென்னை கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட அகரத்தில் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் சார்பிலான ரத்த சுத்திகரிப்பு நிலையம், மறுவாழ்வு மையம், நியாயவிலைக்கடைகள், வளைதள மின்மாற்றி கட்டமைப்பு பணிகளை இன்று முதலமைச்சர் துவக்கிவைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில் தமிழ்நாட்டில் வரும் சட்டப்பேரவை தேர்தலுக்கான திமுக கூட்டணியில் தொகுதி பங்கீட்டிற்க்கான சிறப்பு குழு விரைவில் அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.

*************

அண்ணாமலை

நாட்டின் வளர்ச்சியையும், உள்கட்டைமைப்புகளையும் மேம்படுத்துவதற்காக வரும் நிதியாண்டின் பட்ஜெட் வழிகோலும் என்று பிஜேபி தேசிய பொதுக்குழு உறுப்பினர் திரு.அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வரும் நாட்களில் 8 சதவிகித்தை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

ரயில்வே ஜவுளித்துறைகளை மேம்படுத்தும் விதமாகவும்,

தொல்லியல் ஆராய்ச்சிக்காகவும் தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது என்றும் அவர் தெரிவித்துள்ளார்..

*************

முத்துசாமி

தமிழ்நாட்டில் காலி மது பாட்டிலை ஒப்பந்த அடிப்படையில் தனி முகமை மூலம் பெறுதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக மாநில மதுவிலக்கு

ஆயத்தீர்வை துறை அமைச்சர் திரு.முத்துசாமி தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மதுபான கடைகளை உடனடியாக மாற்றமுடியாது என்றும் படிப்படியாக தான் அதனை குறைக்க வேண்டும் என்பதில் அரசு தெளிவாக உள்ளதாகவும் கூறினார்.

மதுபழக்கத்திற்கு இளைஞர்கள் ஆளாவதை தடுக்க விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

பள்ளி மாணாக்கருக்கான காலை உணவு திட்டம், மகளிர் உரிமை தொகை, கல்லூரி மாணாக்கருக்கு உதவிதொகை போன்றவை வளர்ச்சிக்கானவை என்றும், குறிப்பிட்டார்.

இலவச திட்டங்களுக்கான கடன் அதிகரிப்பை பார்க்காமல் இதனால் மக்கள் பயனடைவதை கண்ணோக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலவச திட்டங்களுக்கான செலவு எதிர்காலத்திற்கான முதலீடு என்றும் அவர் கூறினார்.

*************

அங்கன்வாடி:

காலி பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் நிலுவை காலத்திற்கான ஊதியத்தை வழங்க வேண்டும் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் இன்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விழுப்புரத்தில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்களை காவல்துறையினர் கைது செய்தனர்.

நாமக்கல் பூங்கா சாலையில் போராட்டத்தில் ஈடுபட முயன்ற 300க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர்.

விருதுநகரில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட 500க்கும் மேற்பட்டோரும் கைது செய்யப்பட்டனர்.

*************

பனைமரம்

நாமக்கல் மாவட்டத்தில் பனை மரங்களை வெட்ட அனுமதி கட்டாயம் என்று ஆட்சித்தலைவர் திருமதி துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

*************

தூத்துக்குடி வாய்ஸ்

தூத்துகுடி மத்தியகடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தில் செயற்கை முத்து தயாரிப்பு, கடல் வளம் உள்ளிட்டவை குறித்து பள்ளி மாணாக்கருக்கு ஆராய்ச்சியாளர்கள் விளக்கம் அளித்தனர்.

இதுகுறித்து மாணவி ஒருவர் தெரிவிக்கையில்

வாய்ஸ்

*************

மாசாணியம்மன்:

பொள்ளாச்சி ஆனைமலை அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோவில் குண்டம் திருவிழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

40 அடி நீளமுள்ள தீக்குண்டத்தில் ஏராளமான பக்தர்கள் நேர்த்திக்கடனை செலுத்தினர்.

கோவை, திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து ஆயிரக்கணக்கானோர் திருவிழாவில் பங்கேற்றனர்.

*************

கோவில்

தர்மபுரி குமாரசாமிபேட்டை அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி திருக்கோவில் தைப்பூச தேர் திருவிழாவில் பெண்கள் மட்டுமே வடம்பிடித்த தேரோட்டம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

கீதாஜீவன்

தூத்துகுடி மாவட்டத்தில் 156 மாணாக்கருக்கு அரசின் விலையில்லா மடிக்கணிணிகளை மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி.கீதாஜீவன் இன்று வழங்கினார்.

*************

கிரிக்கெட்

வதோதராவில் நடைபெறும் மகளிர் பிரீமியர் லீக் 20-20 கிரிக்கெட் எலிமினேட்டர் போட்டியில் குஜராத் ஜெயன்ஸ் - டெல்லி கேப்பிட்டல்ஸை இன்று இரவு ஏழரை மணிக்கு எதிர்கொள்கிறது.

இதில் வெற்றிபெறும் அணி நாளை மறுநாள் நடைபெறும் இறுதிபோட்டியில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியுடன் மோதுகிறது.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது